**செய்தி வெளியீடு எண்: 01/10/2021** **நாள்: 01.10.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**2021 செப்டம்பர் மாதத்தில் 26.86 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்**

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடைபிடிக்கப்பட்ட பொதுமுடக்கத்தில் தமிழக அரசு தளர்வுகள் அறிவித்ததைத் தொடர்ந்து சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த 21.06.2021 முதல் 50 சதவீத இருக்கை வசதிகளுடன் மீண்டும் தொடங்கியது.

21.06.2021 முதல் 30.09.2021 வரை மொத்தம் 71,62,297 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

21.06.2021 முதல் 30.06.2021 வரை மொத்தம் 3,55,579 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

01.07.2021 முதல் 31.07.2021 வரை மொத்தம் 18,46,466 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

01.08.2021 முதல் 31.08.2021 வரை மொத்தம் 22,74,066 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

01.09.2021 முதல் 30.09.2021 வரை மொத்தம் 26,86,186 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

அதிகபட்சமாக 09.09.2021 அன்று 1,09,381 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

2021, செப்டம்பர் மாதத்தில் மட்டும் க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 40,332 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டை பயணச்சீட்டு (Travel Card Ticketing System) முறையைப் பயன்படுத்தி 14,59,693 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில்களில் பயணிப்பவர்களுக்கு க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டில் ஒருவழிப்பயண அட்டை, இருவழிப்பயண அட்டை, பலவழி பயன்பாடு அட்டை ஆகியவற்றில் 11.09.2020 முதல் 20% கட்டணத் தள்ளுபடி அளித்து வருகிறது. மெட்ரோ இரயில் பயண அட்டைகளை (Travel Card) பயன்படுத்தி பயணிக்கும் பயணிகளுக்கு 22.02.2021 முதல் 20% கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மெட்ரோ இரயில் நிலையங்கள் மற்றும் மெட்ரோ இரயில்களில் நுழைவதற்கு அனைத்து பயணிகளும் கட்டாயம் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். பயணிகள் முகக்கவசம் அணியாவிட்டாலோ அல்லது முகக்கவசத்தை சரியாக அணியவில்லை என்றாலோ உடனடி அபராதமாக ரூ.200 வசூலிக்கப்படுகிறது. கடந்த 21.06.2021 முதல் 30.09.2021 வரை முகக்கவசத்தை அணியாமல் அல்லது சரியாக அணியாமல் பயணம் செய்ததற்காக 388 பயணிகளிடமிருந்து அபராதமாக ரூ.77,600 வசூலிக்கப்பட்டுள்ளது.

**கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

மெட்ரோ இரயில் நிலைய நுழைவுவாயில்களில் அனைத்து பயணிகள் மற்றும் பணியாளர்களுக்கு உடல் வெப்பநிலை பரிசோதனை செய்யப்படுகிறது.

கொரோனா அறிகுறியற்ற பயணிகள் மட்டுமே மெட்ரோ இரயில் நிலையங்களுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.

அனைத்து மெட்ரோ இரயில் நிலையங்களிலும் செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை தொடர்பான வழிகாட்டுதல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அனைத்து மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ இரயில் நிலைய நடைமேடைகளில் பயணிகள் பயன்படுத்தும் மற்றும் காத்திருக்கும் இடங்களில் தனிமனித இடைவெளி குறித்த “X” குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன. பயணிகள் அனைவரும் இந்தக் குறியீடுகளை பின்பற்றி இருக்கைகளில் அமருமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பயணியர்கள் மற்றும் பொதுமக்கள் தேவையற்ற பயணத்தைத் தவிர்த்து, அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே வெளியே செல்ல வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மெட்ரோ இரயில் நிலையங்களில் நுழைவதற்கும் மெட்ரோ இரயில்களில் பயணிப்பதற்கும் அனைத்து பயணிகளும் கட்டாயம் சரியாக முகக்கவசம் அணிந்திருப்பதுடன் தனிமனித இடைவெளியைக் கடைபிடித்து பயணம் செய்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*******************